# MIN ALAI

# மின் அலை

November 2024 | Volume : 12 | Issue 11 | Price Rs. 18.00/- | Ann. Sub. Rs. 216/-




மாண்புமிகு அமைச்சர் வே.செந்தில்பாலாஜி / மின்சாரம், கலால் மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் அவர்களை 18.11.2024 அன்று நமது சங்கப் பொறுப்பாளர்கள் சந்தித்து முறையீடுகளை அளித்தனர்.



**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**

பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
|---|---|---|
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.N.R.செந்தில் |

தமிழ்நாடு மாநில குருதிப் பரிமாற்றுக் குழுமம் மற்றும் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் சார்பாக 2023– 2024 ஆம் ஆண்டுக்கான "தேசிய தன்னார்வ இரத்ததான நாள்" கடந்த அக்டோபர் 2024 ஆம் மாதம் தமிழ்நாட்டின் பல இடங்களில், அந்தந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் சுகாதாரத்துறை உயர் அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் இரத்த தான முகாம் நாளை சிறப்பாக நடத்திய நமது பொறியாளர் சங்கத்திற்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவுக் கேடயம் வழங்கப்பட்டது.



திருநெல்வேலி கிளை




வேலூர் கிளை



திண்டுக்கல் கிளை

ஆசிரியர்
பொர்.உ.ராஜேந்திரன்
9092687454

ஆசிரியர் குழு
பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.செந்தில் முருகன்
பொர்.K.பிரபாகரன்

| Page | Contents |
|---|---|
| 08 | Our Representations |
| 11 | Board Order |
| 13 | பத்திரிக்கை செய்திகள் |
| 15 | CERC Report |
| 17 | Unified Pension Scheme ஒரு பார்வை |
| 20 | வட்டியை குறைக்க அமைச்சர் வலியுறுத்தல் |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9499014992**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 12 நவம்பர் 2024 இதழ் 11

## பட்டுத் தெளிவாரோ!

சிறந்த செயல்பாடுகளில் முத்திரை பதிக்கும் அரசுதுறை மற்றும் தனியார் துறைக்கோ முதுகெலும்பாக இருப்பது அந்நிறுவனத்தின் பணி புரியும் தொழிலாளர் வர்க்கமே. அத்தகைய தொழிலாளர்களின் ஊதியம், சலுகைகள் பணி நிலைகள், சமூக மற்றும் அரசியல் அந்தஸ்தில் மேம்பாடுகளை பெறுவதற்கு உருவாக்கப்பட்டதுதான் தொழிற்சங்கம். தொழிற்சங்கம் ஒரு நிறுவனத்திற்கும் அந்நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குமிடையே பாலமாக இருப்பது. தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அரணாக தொழிற்சங்கத்தின் செயல்பாடுகள் இருக்க வேண்டும். பல ஆண்டுகள் ஒரு நிறுவனம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்றால், அந்நிறுவனத்தின் செயல்பாடுகள் சிறப்பாக உள்ளது என்றுதான் அர்த்தம். தொழிலாளர் நலன் பாதிக்கப்படாமல், காலத்திற்கு ஏற்ற சில கொள்கை முடிவு மாற்றங்களை மேற்கொள்ளும் நிறுவனம் தான் தொடர்ந்து சிறப்புடன் இயங்கி முத்திரை பதிக்கும். தவறான கொள்கை முடிவுகளை ஒரு நிறுவனம் செயல்படுத்தும் போது அதன் பின் விளைவுகளை சுட்டிக்காட்டி, தொழிலாளர் நலனையும் கருத்தில் கொண்டு சரியான பாதையில் நிறுவனத்தை மடை மாற்றுவது ஒரு தொழிற்சங்கத்தின் கடமையாகும். கொள்கை முடிவு மாற்றங்களின் போது தொழிற்சங்கத்தின் கோரிக்கைகள், ஆலோசனைகள் மற்றும் முறையீடுகளை அந்நிறுவனம் செவிமடுக்கவில்லை எனில் போராட்டம் என்ற ஆயுதத்தை தொழிற்சங்கம் கையில் எடுக்கிறது.

ஒரு நிறுவனத்தின் கட்டமைப்பு சீர்குலைந்து அழிக்கப்பட்ட வரலாற்றில் அந்நிறுவனத்தில் அதிக அதிகாரம் படைத்த சிலரின் தவறான அல்லது சுயநலமான முடிவுகளும் மற்றும் தகுதியற்ற நபர்களுக்கு வழங்கப்படும் அதிகாரத்தினால்

சாத்தியமற்ற உத்தரவு பிறப்பிப்பதும் பதியப்பட்டுள்ளது. மேலாண்மை நிர்வாகத்தினர் அவர்களுக்கு அளிக்கப்படும் தரவுகளின் அடிப்படையில் சில கண்மூடித்தனமான உத்தரவுகளை பிறப்பிக்கின்றனர் அந்த உத்தரவுகளில் உள்ள செயல்பாட்டு சிக்கல்களை களத்தில் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்களால் மட்டுமே சுட்டிக் காட்ட முடியும், இதையே நம் முன்னோர்கள் ‘‘ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது’’ என்பர்.

பொறியாளர் சங்கம் கள தரவுகளின் அடிப்படையில் பணித்தன்மைகளை நிர்வாகத்திற்கு எடுத்துரைக்கிறது. நமது பணியிடங்களை பாதிக்கும் உத்தரவுகளில் உள்ள நடைமுறை சிக்கல்களை அனைத்து உயர்மட்ட நிர்வாகத்திற்கும் சங்கம் எடுத்துரைத்து நேரடி விவாதங்கள் நடைபெற்றன. நம் கூற்றில் உள்ள பெரும்பாலான கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆயினும் அவர்களுக்கு உள்ள நிர்பந்தத்தினால் உத்தரவு ரத்து செய்யப்படமாட்டாது மறுசீராய்வு மட்டுமே செய்யப்படும் என உறுதி அளிக்கின்றனர். நாம் எந்த ஆயுதத்தை ஏற்க வேண்டும் என்பதை நம் எதிரியே முடிவு செய்கின்றனர். மேலும் அரசியல் சூழல்களை கருத்தில் கொண்டு களம் காண வேண்டியுள்ளது.

சில விஷயங்கள் அனுபவத்தால் மட்டுமே போதிக்க முடியும், மேலும் சில கசப்பான அனுபவத்திற்கு பின்னரே வாரியமும் அவற்றை முழுமையாக ஏற்க இயலும். தொழிற்சங்கத்தின் பிரதான ஆயுதமான கூட்டுப் பேர சக்தியை முழுமையாக பயன்படுத்தி இக்காலகட்டத்தில் நம்மிடமிருந்து பறிக்கப்பட்ட பெரும்பான்மையான பணியிடங்களை தக்க வைக்கப்பட்டுள்ளது என்பதே திண்ணம்.

‘‘செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்’’

## பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே!
வணக்கம்.

நமது வாரிய நலன், தற்போதைய களச்சூழல், உறுப்பினர்களின் நலன் ஆகியவற்றை கருத்தில் கொண்டு நமது சங்கம், வாரிய அளவில் பல்வேறு முறையீடுகளை அளித்து உறுப்பினர்களின் நலன் மற்றும் வாரிய நலன் ஆகியவற்றினை மேம்படுத்தி வருகிறது. உறுப்பினர்களும் தங்களின் வாரிய பணியினை திறம்பட செய்து வாரியத்திற்கும், சங்கத்திற்கும் பெருமை தேடி தந்து வருவது பெருமையாக உள்ளது, உறுப்பினர்களுக்கு பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 28.10.2024 அன்று வாரியத் தலைவர் அவர்களைச் சந்தித்து கீழ்கண்ட கோரிக்கைகள் குறித்து விவாதித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது.

- எதிர்பாராத சந்தர்ப்பங்களில் நிகழும் மின் விபத்துகளில் பிரிவு பொறியாளர்கள் மற்றும் வாரிய பணியாளர்களை பலிகடாவாக்கி கிரிமினல் வழக்குகளில் FIR பதியப்படுவதை தவிர்த்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்தல்.

- மற்ற சேவை துறைகளின் பணிகளினால் ஏற்படும் மின்சார கேபிள் சேதாரங்களைத் தவிர்த்திடும் பொருட்டு உரிய திட்டமிடல் மற்றும் ஏனைய சேவைத் துறைகளின் உரிய ஒத்துழைப்பு வேண்டுதல்.
- நிலுவையில் உள்ள தொழில்நுட்ப உதவியாளர் (உள்முகத் தேர்வு) மற்றும் உதவி பொறியாளர் (உள்முகத் தேர்வு) பதவி உயர்வு நடவடிக்கைகளை இறுதி செய்து உடனடியாக வழங்கிட வேண்டுதல்.
- அனைத்து தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ள இளநிலைப் பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்வுகளை உடனடியாக வழங்கிட வலியுறுத்துதல்.
- மின்தடை நீக்க பணிகளுக்கான ஒப்பந்த ஊர்தி வழங்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை களைதல் மற்றும் மின்தடை நீக்க மையங்களின் பணிகளை மேம்படுத்திட ஆலோசனைகள்.

மேற்குறிப்பிட்ட கோரிக்கைகள் குறித்து 29.10.2024 அன்று இயக்குநர் / விநியோகம் அவர்களைச் சந்தித்தும் உரிய முறையீடுகள் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 04.11.2024 அன்று வாரிய தலைவர் அவர்களை சந்தித்து, உதவிப் பொறியாளர் / மின்னியல், இயந்திரவியல் மற்றும் சிவில் உள்முகத்தேர்வு பதவி உயர்வுகளை உடனடியாக வழங்கிடவும், இளநிலைப் பொறியாளர் மின்னியல் / இரண்டாம் நிலையிலிருந்து இளநிலைப் பொறியாளர் /முதல் நிலை பதவி உயர்வுக்கு கூடுதல் எண்ணிக்கையில் call for செய்திட வேண்டியதன் நியாயமான காரணங்களை வலியுறுத்தியும், உடனடியாக இளநிலை பொறியாளர் / சிவில் இரண்டாம் நிலை (உள்முகத்தேர்வு) பதவி உயர்வுகள் வழங்கிட பணியமைப்பு நிர்வாகத்திற்கு வலியுறுத்திடவும் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 06.11.2024 மற்றும் 13.11.2024 ஆகிய தினங்களில் தலைமைப் பொறியாளர் பணியமைப்பு அவர்களைச் சந்தித்து கீழ்கண்ட கோரிக்கைகள் குறித்து விரிவாக விவாதித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது.

- உதவி பொறியாளர் / மின்னியல் இயந்திரவியல் மற்றும் சிவில் (உள்முகத் தேர்வு) பதவி உயர்வுகளை உடனடியாக இறுதி செய்து வழங்குதல்.
- மிகுந்த எண்ணிக்கையில் உள்ள பிரிவு பொறியாளர் காலிப் பணியிடங்களை நிரப்பிட ஏதுவாக இளநிலைப் பொறியாளர்/ மின்னியல் பதவி உயர்வுக்கு, ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலில் மீதமுள்ள 296 நபர்களுக்கு கூடுதலாக call for செய்ய வலியுறுத்துதல்.
- இளநிலைப் பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்வுகளை இறுதி செய்து வழங்குதல்.
- இளநிலைப் பொறியாளர் / சிவில் இரண்டாம் நிலை மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல் உள்முகத் தேர்வு நடவடிக்கைகளை இறுதி செய்து பதவி உயர்வு வழங்குதல்.
- உதவிப் செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்விற்கு இடையூறாக உள்ள நீதிமன்ற தடை உத்தரவை நீக்கிட உரிய நடவடிக்கைகளை விரைவுப்படுத்துதல்.

- இளநிலைப் பொறியாளர் / இயந்திரவியல் முதல் நிலை பதவி உயர்வு நீதிமன்ற வழக்கினை விரைந்து முடித்திட உரிய நடவடிக்கைகள்.
- 2000ம் ஆண்டு பணியேற்பு செய்த உதவிப் பொறியாளர் (பயிற்சி) மற்றும் 2002ம் ஆண்டு உதவிப் பொறியாளர் (உள்முக தேர்வு) ஆகியோரது பணிமூப்பு பட்டியலை (Seniority) நீதிமன்ற உத்தரவின்படி திருத்தி வெளியிட்டு, செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வு call for செய்ய உரிய நடவடிக்கைகள்.
- உதவி செயற்பொறியாளர் / இயந்திரவியல் பதவி உயர்வு call for செய்ய தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

நமது தொடர்ச்சியான முறையீடுகள் மற்றும் வாரியத் தலைவருடனான பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து மின் தொடர் அமைப்புக் கழக துணைமின் நிலைய பராமரிப்பு பொறியாளர்கள், மற்றும் செயற்பொறியாளர் / இயக்கம் பணியிடங்களை மறுசீரமைப்பு செய்து ஏற்கனவே வெளியிடப்பட்ட B.P. 4 நாள் 05.03.2024ன் திருத்தப்பட்ட உத்தரவு (per) FB TNPDCL Proceeding No.04, Dt.12.11.2024 பணியமைப்பு நிர்வாகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட வாரிய ஆணை 04, நாள் 12.11.2024 மூலம் 29 செயற்பொறியாளர் 167 AE/ JE Gr-I_ன் பணியிடங்கள், 127 உதவிப் செயற்பொறியாளர் பணியிடங்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. பொறியாளர் சங்கம் மட்டுமே ஆரம்பம் முதல் இவ்விஷயத்தில் உரிய முறையீடுகள், பேச்சு வார்த்தைகள், உரிய தகவல்கள் மூலம் இந்த சீரமைப்பினால் ஏற்படும் பின் விளைவுகளை, வாரியத் தலைவர் மின் தொடரமைப்பு கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் இயக்குநர் / இயக்கம் ஆகியோரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று போராடி இந்த பதவிகளை தக்க வைத்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் தொடரமைப்பு கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் இயக்குனர் / இயக்கம் ஆகியோரை 15.11.2024 மற்றும் 16.11.2024 ஆகிய தினங்களில் சந்தித்து திருத்தியமைக்கப்பட்ட BP.No.04, Dt.12.11.2024. நடைமுறைப்படுத்துவதற்கு முன் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவான செயல் விளக்கம் வழங்கிட வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் புதிதாய் நிர்மாணிக்கப்பட்டு (2019க்குபின்) இயக்கத்திலுள்ள அனைத்து துணை மின் நிலையங்களுக்கும் உரிய பணியிடங்களை அனுமதி அளிப்பது, MRT மற்றும் GRT (P&C) பிரிவினைகள் பணியிட வரம்புகளை தெளிவுறுத்துதல், மின் தொடர்கள் (Lines) மற்றும் புதைவடங்கள் (UG cables) பராமரிப்புக்காக உரிய செயற்பொறியாளர் பணியிடங்கள் மற்றும் காலியாக உள்ள இளநிலைப் பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை பணியிடங்கள் அனைத்தையும் உடனடியாக நிரப்பிட நடவடிக்கைகள் குறித்தும் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 14.11.2024 அன்று இயக்குனர் / விநியோகம் அவர்களை சந்தித்து, இளநிலைப் பொறியாளர் /மின்னியல் இரண்டாம் நிலை காலிப் பணியிடங்கள் அனைத்தையும் பதவி உயர்வின் மூலம் உடனடியாக நிரப்பிட வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் புதிதாய் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்து துணை மின் நிலையங்களுக்கும் பணியிடங்கள் அனுமதித்தல், கட்டுமான பிரிவு பணியிடங்களை திரும்ப கொணர்தல், மின் தடை நீக்க மையங்களின் சிறந்த செயல்பாட்டிற்கு உரிய நடவடிக்கைகள் ஆகியவைகள் குறித்தும் விவாதித்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 18.11.2024 அன்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து, மழைக்காலம் மற்றும் வரும் கோடைகால மின் தேவையினை சமாளிக்க தேவையான நடவடிக்கைகள், மின் தடை நீக்க மையங்களின் செயல்பாடுகள் மேம்படுத்துதல், சென்னை மின் கட்டமைப்பின் தற்கால பயன்பாட்டிற்கான மேம்பாட்டு திட்டங்கள் குறித்து நமது கருத்துருக்களை வழங்கினோம். அமைச்சர் அவர்களும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகவும், மீண்டும் வரும் நாட்களில் பேச்சுவார்த்தைக்கு நேரம் வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வு நடவடிக்கைகள் இறுதி பெற்றுள்ளன. நிலுவையிலிருந்த நீதிமன்ற வழக்கும் உரிய விசாரணைக்கு பின் (11.11.2024 மற்றும் 18.11.2024) தீர்ப்பிற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல் உள்முகத்தேர்விற்கு, விண்ணப்பித்தோரின் முதல் பணி நியமனம் குறித்து சில தகவல்கள் பணியமைப்பு நிர்வாகத்தால் கடந்த 21.11.2024 அன்று கோரப்பட்டுள்ளது. கிளைப் பொறுப்பாளர்கள் உரிய கவனம் செலுத்தி தகவல்கள் விரைந்து அனுப்பி வைக்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுகிறேன்.

உதவி பொறியாளர் /உள்முகத் தேர்வு நடவடிக்கைகள் விரைவுப்படுத்தப்பட்டுள்ளது விரைந்து பதவி உயர்வுகள் வழங்கிட சங்கத்தின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுவருகிறது.

இளநிலைப் பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை, பதவி உயர்வு நடவடிக்கைகள் இறுதி செய்யப்பட்டுள்ளன. அனைத்து காலிப் பணியிடங்களையும் நிரப்பிட பொறியாளர் சங்கத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. விரைவில் பதவி உயர்வுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்து கிளைகளிலும் மாதாந்திர செயற்குழு கூட்டங்கள் தவறாமல் நடைபெறுவதை உறுதி செய்திட அனைத்து கிளை பொறுப்பாளர்களையும் கேட்டுக்கொள்கிறேன். செயற்குழு கூட்டங்களில் நடைபெறும் இடம் நேரம் குறித்து தகவல்கள் அனைத்து உறுப்பினர்களுக்கும் முன்கூட்டியே தெரிவிக்கப்படுவதையும் உறுதி செய்திட வேண்டுகிறேன். உறுப்பினர்கள், கூட்டங்களில் கலந்து கொண்டு சங்க செயல்பாடுகள் சிறக்க உரிய கருத்துக்களை தெரிவித்திட வேண்டுகிறேன்.

இம்மாதம் 25.11.2024 அன்று மண்டல கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மறைந்த பொறியாளர் சங்க பொறுப்பாளர்களின் நினைவாக வரும் டிசம்பர் 12 அன்று அனைத்து கிளைகளிலும் “இரத்ததான முகாம் நடைபெறவுள்ளது. அனைத்து உறுப்பினர்களும் தங்களின் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் பணியாளர்களுடன் கலந்துக் கொண்டு அரசு பொது மருத்துவமனையின் ஏழை நோயாளிகள் பயன்பெறும் வகையில் இரத்ததானம் வழங்கி இரத்ததான முகாமினை சிறப்பிக்க வேண்டுகிறேன்.

உறுப்பினர்கள் அனைவருக்கும் கிருஸ்துமஸ் மற்றும் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

பொர்.V.S.சம்பத்குமார்
பொதுச் செயலாளர்

To
**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**
TNPDCL,
Chennai-600 002.
**Lr.No.GS/TNEBES/F1/ D.06 /2024, Dt. 04.11.2024.**
Respected Sir,

**Sub:** Promotions to the post of Assistant Engineer / Civil, Electrical & Mechanical by Internal Selection – Applications received from individuals and consolidated –Issuing of promotion orders - requested regarding

**Ref:** 1. Letter No. 004565 / G.55 / G.551 / 2022, Dated: 24.01.2024
2. Letter No. 004565 / G.55 / (N)-G.172 / 2020, Dated: 29.01.2024
3. Letter No. 04565 - C / G.55 / (N)-G.172 / 2020, Dated: 01.02.2024

Promotions for the post of Assistant Engineer / Electrical, Mechanical and Civil by Internal Selection were called from eligible individuals vide references cited above. The calling for was made based on our Sangam's persistent representations.

We learn that numerous applications have been received and consolidated by the Personnel Administration. The consolidated applications needs to be shortlisted for issuing of promotions.

Quite huge number of Assistant Engineer posts are lying vacant affecting the day to day works in the field particularly the Section Offices and Generating Stations. Issuing of these Assistant Engineer promotions will hugely benefit our needs.

Hence we request the respected Chairman cum Managing Director to instruct the respected Chief Engineer / Personnel to expedite the promotion process and issue promotions to the post of Assistant Engineer / Civil, Electrical and Mechanical by Internal Selection and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,
**(V.S. SAMPATHKUMAR)**
General Secretary.

Copy to the Chief Engineer / Personnel / TNPDCL

---

To
**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**
TNPDCL,
Chennai-600 002.
**Lr.No.GS/TNEBES/F1/D.07/ 2024, Dt. 04.11.2024**
Respected Sir,

Sub: Junior Engineer / Electrical I Grade Promotions –Fresh Panelcalled for is meagre – Calling for of additional persons - requested regarding.

Ref: 1. Letter No. 042144/G3/G31/2024-3, dated: 09.10.2024
2. Letter No. 013624/G4/G41/2022-5, dated: 04.06.2022.
3. Lr.No.GS/TNEBES/F1/D.38/ 2023, Dt. 22.05.2023
4. Lr.No.GS/TNEBES/F1/D.21/ 2023, Dt. 11.09.2023
5. Lr.No.GS/TNEBES/F1/D.30/ 2024, Dt. 09.01.2024
6. Lr.No.GS/TNEBES/F1/D.44/ 2024, Dt. 20.02.2024
7. Lr.No.GS/TNEBES/F1/D.49/ 2024, Dt. 18.06.2024

Huge backlog exists in Junior Engineer / Electrical I Grade posts. Based on our Sangam's persistent representation to set right the said backlog, suitability report has been called among 316 Junior Engineer / Electrical II Grade vide reference – 1 cited. The called for numbers are very meagre and doesn't justify the need to fill in the huge vacancies and backlog with readily available hands.

Justice hasn't been delivered to us in the earlier panel too and we have illustrated the earlier history in detail below.

- Based on our Sangam's earlier representation to set right the backlog, suitability report was called among 1129 Junior Engineer / Electrical II Grade for promotion to the post of Junior Engineer / Electrical I Gradevide reference – 2.
- Among the called for persons, Promotion orders were issued to just 658 persons in 3 batches, that too after our continuous representations cited under references 3 to 7.
- The worrying factor in that previous panel was DPC wasn't conducted for the whole called for list and 300 persons were left out in that DPC.
- Our repeated representations to conduct DPC for the left out 300 persons and issue promotions for them too went unheeded.

Presently fresh call for has been made for a very meager 316 persons. In that list around 108 persons listed in the earlier call for (Ref 2 cited above) too have been left out which is quite illogical and worrying considering the huge vacancies and backlog.

Hence we request the intervention of the respected Chairman cum Managing Director to consider our genuine plea and instruct the respected Chief Engineer / Personnel to call additional persons suitably for promotion to the post of Junior Engineer / Electrical I Gradeand thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,
**(V.S.SAMPATH KUMAR)**
General Secretary.

Copy to the Chief Engineer / Personnel, TNPDCL

---

To
**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**
TNPDCL,
Chennai-600 002.

**Lr.No.GS/TNEBES/F1/D.08/ 2024, Dt. 04.11.2024**

Respected Sir,

Sub: Junior Engineer / Electrical II Grade Promotions –Conducting of DPC and issuing of Promotions - requested regarding.

Ref: Letter No. 027722/G4/G41/2024-2, dated 24.05.2024

Suitability report has been called among 915 Technical Assistants/Electricalfor promotion to the post of Junior Engineer / Electrical II Gradeunder the crucial date of 20.03.2024.

Based on our Sangam's continuous representation to fill up the vacant posts, we learn that DPC is underway and is nearing completion. We request the early completion of this DPC process and filling up of the vital Substation vacant posts at the earliest.

Hence we request the intervention of the respected Chairman cum Managing Director to instruct the respected Chief Engineer / Personnel to complete the process and to issue promotion to the post of Junior Engineer / Electrical II Grade and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,

**(V.S.SAMPATH KUMAR)**

General Secretary.

Copy to the Chief Engineer / Personnel, TNPDCL

---

To

**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**

TNPDCL,

Chennai-600 002.

**Lr.No.GS/TNEBES/F1/ D.09 /2024, Dt. 04.11.2024.**

Respected Sir,

**Sub:** Promotions to the post of Junior Engineer / Civil II Grade by Internal Selection – Applications received from individuals and processed –Issuing of promotion orders - requested regarding

**Ref:** Letter No. 035754 / G20 / G201 / 2023, Dated: 06.11.2023

Promotions for the post of Junior Engineer /Civil II Grade is pending for almost a decade. Promotions to the post of Junior Engineer / Civil II Grade is issued by Internal Selection. Based on our Sangam's persistent representations particulars were called from eligible Civil Diploma holdersvide reference cited above.

Particulars have been received from the individuals quite long ago, consolidated by the Personnel Administration and shortlisted. Yet promotion orders have not been issued leaving the aspiring individuals worrying.

Hence we request the respected Chairman cum Managing Director to instruct the respected Chief Engineer / Personnel to issue promotion to the post of Junior Engineer / Civil II Grade at the earliest and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,

**(V.S. SAMPATHKUMAR)**

General Secretary.

Copy to the Chief Engineer / Personnel / TNPDCL

## BOARD ORDER

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED (TNPDCL)**

TANTRANSCO - Review of staff pattern in Non-Workload areas Review of Staff pattern for technical posts in Sub-Stations ordered as per the recommendation of the Committee - Modified orders issued.

**(ADMINISTRATIVE BRANCH)**

(Per.) FB TNPDCL Proceedings No.4 Dated 12.11.2024
Iyppasi 26, Kurothi Varudam
Thiruvalluvar Aandu 2055

**READ:**

1. (Per.) CMD TANGEDCO Proceedings No.78, (Sectt. Branch), dated 05.05.2020.
2. From the CE/ Grid Operation/ Chennai Letter No.CE/ GO/ EA/ F.Non-Workload Committee/ D.No.183/ 23, dated.24.03.2023. (Addressed to the Secretary/ TANGEDCO).
3. Minutes of the 122nd Board Meeting of TANGEDCO held on 06.02.2024.
4. (Per.) FB TANGEDCO Proceedings No.4, (Adm. Branch), dated 05.03.2024.

**PROCEEDINGS:**

1) In the Proceedings first read above, orders were issued to constitute a Committee to review the staff pattern in Non-Workload areas. Accordingly, a Committee has been constituted to review the staff pattern for technical staff (non-workload posts) for the Sub-Stations (110 kV, 230 kV, 400 kV and 765 kV) under the chairmanship of the Chief Engineer/ Grid Operation/ Chennai.

2) As per recommendation of the said Committee, orders were issued for reviewing the staff pattern for technical posts (i.e., EE (Operation)/ AEE (Maintenance)/ AE (Maintenance) to be followed for maintenance of the Sub-Stations, vide Full Board Proceedings fourth read above.

3) Consequent on the above orders, the Chief Engineers/ Superintending Engineers have expressed their concerns to implement the staff pattern as ordered in the said Proceedings. Moreover, a Writ Petition No.12463/2024 has been filed by the TNEB Engineers' Association challenging the said orders issued and the TNEB Engineers' Sangam has also raised certain issues to implement the orders. Therefore, the subject matter has been discussed with the CMD/ TANGEDCO and higher officials.

4) Based on the discussions, a proposal has been submitted to modify the staff pattern as ordered in the Proceedings fourth read above, by considering the number of Sub-Stations in a Circle and number of power transformers maintained in the Sub-Stations. The proposal has been approved by the Board of Directors through Circulation.

5) Accordingly, it is hereby ordered that the staff pattern for technical posts for the maintenance of the Sub-Stations (230 kV and 110 kV Sub-Stations) as ordered in the Proceedings fourth read above are modified as below:-

| | |
|---|---|
| Executive Engineer (Operation) | Staff Pattern already ordered in Proceedings No.4, dt.05.03.2024.<br>For each Distribution Circle, 1 No. Executive Engineer/ Operation covering all the 230 KV Sub-Stations and 110 kV Sub-Stations.<br>Staff Pattern modified as<br>One Executive Engineer/ Operation has to look after 20 Nos. of Sub-Stations (Combination of 230 kV and 110 kV Sub-Stations) in the respective Distribution Circle.<br>For the Distribution Circles having more than 20 Nos. of Sub-Stations, one additional Executive Engineer/ Operation shall be allowed.<br>The excess posts of EEs shall be kept for redeployment to the needy places. |
| AEE (Maintenance) | Staff Pattern already ordered in Proceedings No.4, dt. 05.03.2024:<br>One AEE/ Maintenance of 230 kV SS has to look after 4 Nos. of 110 KV Sub-Stations (and)<br>One AEE/ maintenance for 10Nos. of 110 KV Sub-Stations in a Circle. |
| | Staff pattern modified as<br>Each AEE / Maintenance of 230 KV SS has to look after 2 Nos. 110 KV (Grid / Non- Grid) Sub- Stations additionally in the respective Distribution Circle. |
| | For Every remaining 4 Nos. of 110 KV Sub-Stations, one AEE/ Maintenance shall be allowed in the respective Distribution circle. |
| | Staff pattern already ordered in proceedings No.4, dt.05.03.2024.<br>One AE/ Maintenance for two 110 KV Sub-stations |
| AE /JE I Grade (Maintenance) | Staff pattern modified as<br>One AE / JEI Grade (Maintenance) has to be allowed for each 110KV (Grid / Non- Grid) sub-station having 4 and above power Transformers.<br>One AE/JE I Grade (Maintenance) has to be allowed for 2 Nos. of 110KV (Grid / Non-Grid) Sub-stations having 3 or less than 3 power Transformers.<br>The excess posts of AEs shall be kept for redeployment to the needy places. |

6) Apart from the above modified staff pattern, the remaining orders issued in the Proceedings fourth read above remain unaltered.

7) The Superintending Engineers of Operation Circles and Superintending Engineers of Distribution Circles are directed to allocate the Sub-Stations as per the above modified staff pattern and to identify the Executive Engineers, Assistant Executive Engineers (Maintenance) and Assistant Engineers (Maintenance) to be retained to look after the maintenance of the Sub-Stations of their respective Distribution Circles and to furnish the details of excess posts to this office for further action.

(BY ORDER OF THE BOARD)

**M. SUDARSAN CHIEF ENGINEER / PERSONNEL**

**பத்திரிக்கைச் செய்திகள்**

## தமிழக அனல்மின் நிலையங்களில் உற்பத்தியை அதிகரிக்க மத்திய மின்சார ஆணையம் அறிவுறுத்தல்

சென்னை, நவ.7.

தமிழகத்திலுள்ள அனல்மின் நிலையங்களின் உற்பத்தியை அதிகரிக்க மத்திய மின்சார ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கட்டுப்பாட்டில் வடசென்னை, மேட்டூர், தூத்துக்குடிக்கு உள்பட்ட பகுதிகளில் 5 அனல்மின் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்களின் உற்பத்தி திறன் 4,320 மெகாவாட்டாக இருந்து வரும் நிலையில், நிகழாண்டு மார்ச் 31–ஆம் தேதி நிலவரப்படி இந்த அனல்மின் நிலையங்களின் உற்பத்தி திறனில், சராசரியாக 67.14 சதவீதம் அளவுக்கு மட்டுமே மின் உற்பத்தி நடைபெற்றுள்ளது. இந்நிலையில், இந்த அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தியின் அளவை 85 சதவீத மாக அதிகரித்து சிறப்பாக செயல்படுத்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்துக்கு மத்திய மின்சார ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

ஆனால், மத்திய மின்சார ஆணையத்தின் அறிவுறுத்தல் படி மின்நிலையங்களை செயல்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதாக தமிழ்நாடு மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறும்போது, அனல் மின் உற்பத்தி நிலையங்கள் இயங்குவதில் பல்வேறு தொழில்நுட்ப சிக்கல்கள் மற்றும் நிலக்கரி வந்து சேர்வதிலும், அதை கையாளுவதிலும் பல்வேறு பிரச்சினைகள் இருந்து வருவதால், 85 சதவீதமாக உடனடியாக அதிகரிப்பது என்பது சாத்தியமில்லாத ஒன்றாக உள்ளது.

இருப்பினும், படிப்படியாக அதை செயல்படுத்துவோம். முதலில் 7 சதவீதம் மின் உற்பத்தியை அதிகரித்துள்ளோம். இந்த நிதியாண்டில் மின் உற்பத்தியை 12 சதவீதமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இற்கான நடவடிக்கைகளை மின்வாரியம் படிப்படியாக மேற்கொண்டு வருகிறது. ஆனால், இந்த நிலையை அடைய மத்திய அரசு தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்து வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

நன்றி – தினமணி

## ஒன்றிய அமைச்சருடன் நமது மாநில அமைச்சர் கலந்தாய்வு

**செய்தி வெளியீடு எண்: 1797** **நாள்: 26.10.2024**

ஒன்றிய அரசின் மாண்புமிகு மின்சாரம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.மனோகர் லால் அவர்கள் மற்றும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் எரிசக்தித்துறை சார்பாக நடைபெற்று வரும் மின் திட்டங்களின் மேம்பாடுகள் குறித்து கலந்தாய்வுக்கூட்டம் சென்னையில் இன்று (26.10.2024) நடைபெற்றது.

தமிழ்நாட்டில் தற்போது பணிகள் நடைபெற்று வரும் அனல் மின் திட்டங்களான 1×800 மெ.வா., வடசென்னை அனல் மின் திட்டம் –III (மூன்றாம் நிலை), 2×660 மெ.வா. உடன்குடி அனல் மின் திட்டம் முதல் நிலை. 2×660 மெ. வா. எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல திட்டம், 1×600 மெ. வா. எண்ணூர் மிக உய்ய விரிவாக்க மின் திட்டம் ஆகிய அனல் மின் உற்பத்தி திட்டங்களின் கட்டுமானப் பணிகள் குறித்து விரிவாக மாண்புமிகு அமைச்சர்கள் ஆலோசனை செய்தனர்.

மேம்படுத்தப்பட்ட மின் விநியோகத் திட்டத்தின் கீழ், மின் இழப்பைக் குறைப்பதற்காக 8,932 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. இப்பணிகளை விரைந்து முடிக்க தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒன்றிய மாநில அலுவலர்களை அமைச்சர்கள் அறிவுறுத்தினர்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில். தமிழ்நாடு எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.பீலா வெங்கடேசன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. க. நந்தகுமார். இ.ஆ.ப., மற்றும் ஒன்றிய, மாநில அரசுகளின் உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

## பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்க்கண்ட பொறியாளர்கள் 31.10.2024 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

1. Er. A.SULTHAN MAITHEEN, AEE / CHP I / MTPS II Divisional Secy. / MTPS / MTPS Branch. Phone: 94423 41885
2. Er. A.PRAKASH, EE / Elec. / ECHP II / TTPS / TTPS Branch. Phone: 9150317643
3. Er. S.SHAKILABANU, EE / Operation / Vinnamangalam / Thirupathur Branch. Phone: 8524068613
4. Er. G.JAYAPRAKASH ANANDARAJ, AEE / Thiruverkadu / Chennai West Branch. Phone: 96001 35406
5. Er. R.LAKSHMIKANTHAN, JE-I / O&E / MTPS-I / MTPS Branch. Phone: 94439 16254
6. Er. K.RAJARAMAN, JE I / O&M / Kuttiyankuppam / Cuddalore Branch. Phone: 9486331353
7. Er. V.SIVARAM, JE I / Spl. Mtce. / Thuckalay / Kanyakumari Branch. Phone: 9442151933
8. N.SIVASUBRAMANIYAN, JE I / 110 / 22 KV SS / Kallal / Sivagangai Branch. Phone: 9442676473

### VOLUNTARY RETIREMENT

1. Er. ARUNAGIRI, AEE / Maintenance110 KV SS / Villupuram / Villupuram Branch. Phone: 8531879902
2. Er. C.SHANKARAN, AE / Maintenance110 KV SS / Siruganur Former DS / Srirangam / Trichy Branch. 94434 07735
3. Er. REJEEV FREDERICK, AEE / Data Center / IT / Chennai HQ Branch. Phone: 9940596068

# “TANGEDCO” major buyer of power from High Price Day Ahead Market in 2023-24, says CERC report

**The market segment was introduced to help high-cost generators, who have otherwise been unable to participate in the day-ahead market due to the existing price ceiling**

The Tamil Nadu Generation and Distribution Corporation (Tangedco) was the major buyer of electricity from the High Price Day Ahead Market in power exchanges, according to data shared in the report on short-term power market in India 2023-24, released by the Central Electricity Regulatory Commission (CERC)

The CERC had approved the introduction of High Price Day Ahead Market 1 (HP-DAM) in February 1, 2023. The dedicated market segment was introduced to help high-cost generators, who have otherwise been unable to participate in the day-ahead market due to the existing price ceiling. Initially, the bid price range was between 0/kWh to ₹50/kWh in this segment, but was revised to ₹0/kWh to ₹20/kWh w.e.f. 11th, April 2023.

At present, only gas- based generating stations using imported Regasified Liquefied Natural Gas (RLNG) and naphtha; imported coal-based generating stations using only imported coal; and Battery Energy Storage Systems (BESS) are allowed to sell power in the HP-DAM segment.

The Total Volume transacted through the HP- DAM in Indian Energy Exchange was about 32.07 million units (MU) in 2023- 24, and the Tangedco accounted for 20.98 MU or 65.43%. The Tangedco's weighted average purchase power was 17.65 per unit, according to the report. State power utilities from Andhra Pradesh, Bihar and West Bengal and other private players were the other buyers in the segment.

The Tangedco also bought 6.86 MU of electricity in 2023-24 at a weighted average price of ₹16.48 per unit, from the HP-DAM of Power Exchange India (PXIL), another power ex-change. This is 88.35% of the total 7.77 MU transacted in the segment.

As a short-term measure, States, including Ta mil Nadu, purchase power from the exchanges to meet the rise in demand during summer. During the 2023-24 period, Tamil Nadu reached a record peak power demand of 19,387 MW on April 20, 2023.

**Power demand**

Tamil Nadu has the highest power demand in the southern region. The State has the highest number of factories, accounting for 15.66% of the total number of factories in India (2,53,334). During summer this year, the State's power demand touched an all- time-high of 20,830 MW on May 2. The daily consumption hit a new high of 454.32 MU on April 30.

by **Sanjay Vijayakumar,** Chennai

**விநியோக நிறுவனங்களின் நிதி இழப்புகள்:**

இந்தியாவிலுள்ள 30 மாநில மின் விநியோக நிறுவனங்களின் நிதி இழப்புகள் யூனிட் ஒன்றுக்கு 40–45 பைசா வரை இருக்கும் என ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது. ஆண்டுதோறும் இந்த இழப்புகள் குறைந்து வந்த போதிலும், 40–45 பைசா வரை இழப்புகள் தொடரும் என்று கூறப்படுகிறது.

சராசரி மின் அளிப்பு செலவுக்கும், மின் கட்டண விகிதத்துக்கும் உள்ள இடைவெளி, செயல்பாட்டு இழப்புகள் (OPERATING LOSS) என்று கூறப்படுகிறது. மின்சக்தி அளிக்கும் செலவுக்கு ஏற்ப (AVERAGE COST OF SUPPLY) மின் கட்டண உயர்வு செய்யப்படுவதில்லை. நிதி நிலையை சமாளிக்க விநியோக நிறுவனங்கள் கடன் வாங்குகின்றன. மின் விநியோக நிறுவனங்களின் கடன் நிலுவைத்தொகை அதிகரிக்கிறது. விநியோக நிறுவனங்கள் அரசு அளிக்கும் மானியத்தை நம்பி இருக்க வேண்டியுள்ளது. குறித்த காலத்தில் மானியங்கள் கிடைக்காவிட்டால், நிதிச்சுமை இன்னும் அதிகரிக்கும்.

மின் அளிப்பு செலவுக்கும், மின் கட்டண விகிதத்துக்கும் உள்ள இடைவெளியை குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், மின் கட்டண உயர்வு மெதுவாக செய்யப்படுகிறது. இடைவெளி தொடர்கிறது. கடந்த இரண்டாண்டுகளில் அதிக மின்தேவை காரணமாக, மின்சக்தி விலை அதிகரித்தது. மின் அளிப்பு செலவு சராசரியாக 90 பைசாவுக்கு மேல் உயர்ந்தது. ஆனால் மின் கட்டணவிகிதம் 70 பைசாவுக்குமேல் உயர்த்தப்படவில்லை. இந்தியாவில் மின் கட்டண விகித ஆணைகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக. இந்தியாவிலுள்ள 36 மாநில மின்விநியோக நிறுவனங்களில், 10 நிறுவனங்களுக்கான மின் கட்டண விகித ஆணைகள் தாமதமாக வெளியிடப்பட்டு உள்ளன அல்லது வெளியிடப்படாமல் இருக்கின்றன.

எரிபொருள் விலை உயர்வுக்கு ஏற்ப, மின் கட்டண விகிதத்தை உயர்த்தி ஒழுங்குமுறை ஆணையங்கள் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் 15 மாநிலங்களில் மட்டுமே இது நடைமுறைக்கு வந்துள்ளது. மின்சக்தி பயன்பாட்டை கணக்கிடுவதும், பட்டியலிட்டு வசூலிப்பதில் இந்த திறன் அளவு 90%க்கும் குறைவாகவே இருக்கிறது. இதனால் மின் அளிப்பு செலவுக்கும் மின் கட்டணத்துக்கும் உள்ள இடைவெளி 40–45 பைசாவாக உயர்ந்து உள்ளது.

மாநிலங்கள் அந்த மாநிலத்தில் அதிக மின் உற்பத்தி செய்து மின் சக்தியை அளிக்கும் போது மின் சக்தி வாங்கும் செலவு குறைகிறது. இதனால் மின் அளிப்பு செலவு குறையும். வணிக தொழில்நுட்ப இழப்புகள் குறையும் போது மின் அளிப்பு செலவு குறைய வாய்ப்பு உள்ளது. பட்டியலிடுதலும் கட்டண வசூல் திறனும் அதிகரிக்க வேண்டும். இவைகளினால் விநியோக நிறுவனங்களின் இழப்புகள் குறைய வாய்ப்பு இருக்கிறது.

- ET ENERGY WORLD

# UNIFIED PENSION SCHEME ஒரு பார்வை

2003 வரை GPF பிடித்தம் நடைமுறையில் இருந்தது. இது வேலை காலத்தின் போது சேமிப்பிற்காகவும், ஓய்வு கால பணப்பயனுக்காகவும் கட்டாயமாக்கப்பட்டிருந்தது.

GPF ஐ, Department of Pension and Pensioner Welfare, Low Risk Investment செய்து Guaranteed Return உள்ள இடத்தில் முதலீடு செய்திருந்தார்கள். இதில் Flexibility இருந்தது. சொந்த குடும்ப தேவைக்கு எடுத்து கொண்டு திருப்பி செலுத்திவிடலாம். மேலும் GPF–ல் செலுத்திய பணம் ஓய்வின் போது 100% திரும்ப பெற்றுக் கொள்ளும் வசதி இருந்தது. Pension என்பது நமது பணத்தில் Infrastructure போன்ற செலவுகளுக்கு பயன்படுத்தி, அப்போது கொடுக்கப்படாத ஊதியம் தற்போது Pension ஆக வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் CPS (Contributory Pension Scheme) அறிமுகப்படுத்தப்பட்டது. பணியாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட பணமும் PFRDA (Pension Fund Regulatory and Development Authority)–விடம் செலுத்தப்படாமல் உள்ளது.

2004 முதல் NPS (National Pension Scheme) அமுலுக்கு வந்தது. அதில் WEST BENGAL, TAMILNADU இணையவில்லை. தமிழ்நாட்டில் பிடித்தம் செய்யப்பட்ட 10% NPS Fund–ல் சேர்க்கவில்லை. அதனால் Commutation, Gratuity நிறுத்தப்பட்டது. மேலும் CPS (Contributory Pension Scheme) என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் NPS–ல் நமது பணம் 10% மற்றும் அரசு போடும் 10% சேர்ந்து Mutual Fund போன்றவற்றில் முதலீடு செய்து அதில் வரும் Return மட்டுமே Pension ஆக வழங்கப்படும். இது Fixed Amount Pension அல்ல. Market Based Pension. பின் நாம் ஓய்வு பெறும் போது நமது சேமிப்பில் உள்ள மொத்த பணத்தில் 60% மட்டும் திரும்ப வழங்கி 40% Annuity Fund–ல் முதலீடு செய்யப்படும் அதை 10 நிறுவனங்கள் Manage செய்து, அதில் வரும் Market Based வருமானத்தை Pension ஆக வழங்கப்படும்.

Lumpsum payment Basic + D.A. + 10% என்பது ஊழியரின் NPS தொகையிலிருந்து எடுக்கப்படும். அதற்கு 12–ல் ஒரு பங்கு தரப்படும் என UPS வரையறை செய்கிறது.

அதாவது 8.33% ஊழியரின் பிடித்தம், மீதம் உள்ள 91.67% தான் Annuity Fund–க்கு செல்லும்.

No Separate Lumpsum will be disbursed.

No Commutation will be allowed.

For the pensioners who had served below 10 years. Nothing is mentioned.

No Family Pension will be given.

No DA allowed.

பணியாளர்களின் பெரும் போராட்டங்களைக் கருத்தில் கொண்டு தற்பொழுது UPS என்கிற புதிய திட்டம் 2025 முதல் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏற்கனவே ஆந்திராவில் Guaranteed Pension என்கிற முறையில் அமுல்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது.

மத்திய அரசு பணியாளர்களிடம் இருந்து பிடித்தம் செய்து, இதுவரை NPS–ல் உள்ள பணம் ரூ.347269 கோடி உள்ளது. மேலும் State Government பணம் ரூ.632680 கோடி உள்ளது. (தமிழ்நாடு அரசிடம் மட்டும் 73574 கோடி உள்ளது). மொத்தம் 10 லட்சம் கோடி ரூபாய் உள்ளது. For the beneficial usage of the above fund, now UPS, has been formed. Retirement நேரத்தில் தரவேண்டிய 60% தொகையை Share Market மற்றும் Corporate Investment–க்கு பயன்படுத்தும் வகையில் புதிய UPS திட்டம் உள்ளது.

**As per New UPS Scheme**

1. **உறுதி செய்யப்பட்ட ஓய்வூதியம்**

   கடைசி 12 மாத ஊதியத்தின் சராசரியில் 50% இது 25 ஆண்டுகள் பணியில் இருந்தவர்களுக்கு மட்டும் 10 முதல் 25 ஆண்டுகள் வரை பணிபுரிந்தவர்களுக்கு விகிதாசார அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படும்.

2. **உறுதி செய்யப்பட்ட குடும்ப ஓய்வூதியம்**

   பணியாளர் மரணமடைந்தால் அவர் பெற்றுக் கொண்டிருந்த ஓய்வூதிய தொகையில் 60% வரை குடும்ப ஓய்வூதியம் வழங்க உறுதி செய்கிறது.

3. **உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச ஓய்வூதியம்**

   10 வருட சேவை செய்தவர்களுக்கு ரூ.10,000/– ஓய்வூதியம் வழங்கப்படும்.

   10 வருடத்திற்கு குறைவான சேவை செய்தவர்களுக்கு எந்தவித அறிவிப்பும் இல்லை.

4. **உறுதி செய்யப்பட்ட DA**

   பணி செய்பவர்களுக்கு வழங்கப்படும் DA ஓய்வூதியர்களுக்கும் வழங்கப்படும்.

5. **Lumpsum Amount**

   பணிக்கொடையுடன் கூடுதலாக பணியாளர்கள் பணியில் இருந்த ஒவ்வொரு 6 மாத கால சேவைக்கும் ஓய்வு பெறும் தேதியின்படி அவர்கள் மாதாந்திர சம்பளத்தில் 1/10–க்கு சமமான மொத்த தொகையை Lumpsum Amount வழங்கப்படும். இது ஓய்வதியத்தை பாதிக்காது.

## கிருஸ்துமஸ் வாழ்த்துக்கள்







**பொறியாளர் சங்கம் உறுப்பினர்கள்**
**அனைவருக்கும் சங்கம்**
**கிருஸ்துமஸ் நல்வாழ்த்துகளைத்**
**தெரிவித்துக்கொள்கிறது**

**The below table provides the differences between UPS and NPS**

| Particulars | UPS | NPS |
|---|---|---|
| Employers contribution | Employers will contribute 18.5% of the basic salary to the pension fund. | Employers will contribute 14% of the basic salary to the pension fund. |
| Pension amount | 50% of the average basic pay over the last 12 months before retirement for employees with 25 years of service. | Employers will contribute 14% of the basic salary to the pension fund. |
| Family pension | In the case of the retiree's death, 60% of the pension received immediately before the retiree's demise will be provided to his/her family. | The family pension provided under the NPS depends on the accumulated corpus and the chosen annuity plan |
| Minimum pension amount | Rs. 10,000 per month for employees retiring with at least 10 years of service. | The pension amount depends on the investments made in the market-linked investment schemes. |
| Lump sum amount | A lump sum amount is provided to employees upon superannuation, calculated as 1/10$^{th}$ of their last drawn monthly pay for every six months of completed service. | Employees can withdraw up to 60% of the NPS corpus as a lump sum upon superannuation. |

பணியாளர்கள் UPSல் இணைவதற்கு option கொடுக்க வேண்டும்.

பொர். R.அழகுசபை
முன்னாள் சட்டச்செயலாளர்
தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

**மத்திய அரசு நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்ட கடன் வட்டியை 8 சதவீதமாக குறைக்க வேண்டும் எரிசக்தி துறை மாநாட்டில் மாண்மிகு அமைச்சர் செந்தில் பாலாஜி வலியுறுத்தல்**

**சென்னை**

மத்திய அரசு நிதி நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்டுள்ள கடனுக்கான வட்டியை 8 சதவீதமாக குறைக்க வேண்டும் என டெல்லியில் நடைபெற்ற எரிசக்தி துறை அமைச்சர்கள் மாநாட்டில். மின்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி வலியுறுத்தி உள்ளார்.

மத்திய மின்துறை அமைச்சர் மனோகர் லால் தலைமையில், அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் எரிசக்தி துறை அமைச்சர்கள் மாநாடு புதுடெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில், தமிழக மின்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி பங்கேற்றார். அப்போது அவர் பேசியதாவது: தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் 5 ஆண்டு கட்டண ஆணையை அறிவித்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளில், தமிழ்நாடு மின்வாரியத்துக்கு இழப்பீட்டுத் தொகையாக, சுமார் ரூ.37 ஆயிரம் கோடியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. 2023–24–ம் ஆண்டின் செலவுகளுக்கு பிந்தைய வருவாய் ரூ.15,843 கோடி என எதிர்பார்க்கப்பட்டாலும், முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட கணிசமான வட்டிச் சுமையால் நிறுவனம் தொடர்ந்து இழப்புகளைச் சந்தித்து வருகிறது.

தமிழ்நாடு மின்வாரியத்தின் வட்டிச்சுமை சுமார் ரூ.16 ஆயிரம் கோடியாக உள்ளது. மத்திய அரசின் நிதி நிறுவனங்களான ரூரல் எல்க்ட்ரிஃபிகேஷன் கார்ப்பரேஷன் (ஆர்இசி) மற்றும் பவர்ஃபைனாஸ் கார்ப்பரேஷன் (பிஎஃப்சி) ஆகியவைகளிடம் இருந்து வாங்கப்பட்ட கடனுக்கு 10.5 சதவீதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. இதை 8 சதவீதமாக குறைக்க வேண்டும்.

பிரதமரின் சூர்யகர் முஃப்த் பிஜ்லி யோஜனா திட்டத்தின் கீழ், புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட கடந்த ஜூன் மாதம் மத்திய மின்துறை அமைச்சகம் கூடுதல் நிபந்தனையை அறிமுகப்படுத்தியது. இந்த ஒப்பந்தத்தில் இலக்குகள் குறித்து தெளிவாக வரையறுக்கப்படவில்லை. மேலும் புதிய நிபந்தனைகள் எதுவும் விதிக்கப்படக்கூடாது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட வேண்டியிருந்தால், தமிழக அரசின் ஒப்புதலுடன் இலக்குகள் இறுதி செய்ய வேண்டும்.

புதிய துணை மின் நிலையங்களை நிறுவுதல் மற்றும் மேம்பாட்டு பணிகள் உட்பட மின் கட்டமைப்பு நவீனமயமாக்கலுக்காக ரூ.3.246 கோடி மதிப்பிலான திட்ட கருத்துருவுக்கு மத்திய மின்சார அமைச்சகம் விரைவாக ஒப்புதல் வழங்க வேண்டும். தமிழகத்தில் 2,640 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் உற்பத்தி திட்டங்களும், 520 மெகாவாட் குந்தா நீர்மின் சேமிப்பு திட்டமும் தற்போது கட்டுமானத்தில் உள்ளன.

ரெய்கர் – புகளூர் – திருச்சூர் 800 கி.வோ. மின்பரிமாற்ற தொடர மைப்பின் கட்டணங்களை நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களும் பகிர மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டது. ஆனால், இந்த கட்டண சுமையை தென்பிராந்திய மின்விநியோக நிறுவனங்களின் மீது விதிக்கப்பட்டுள்ளது. இந்த பாரபட்சமான நடவடிக்கை, தென்மாநிலங்களின் நலனுக்கு உகந்ததல்ல. இவ்வாறு கூறினார்.

இந்தக் கூட்டத்தில், மத்திய மின் துறை இணை அமைச்சர் ஸ்ரீபாத் யெஸ்ஸோ நாயக், தமிழ்நாடு மின்வாரிய தலைவர் க.நந்தகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

## மாண்புமிகு ஒன்றிய மின்சாரம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.மனோகர் லால் கலந்தாய்வு

26.10.2024 அன்று சென்னையில் மாண்புமிகு ஒன்றிய மின்சாரம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.மனோகர் லால் அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில் பாலாஜி ஆகியோர் ஒன்றிய மற்றும் மாநில மின்சாரத் துறை உயர் அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டனர். இக்கூட்டத்தில் எரிசக்தித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி.பீலா வெங்கடேசன், இ.ஆ.பட தமிழ்நாடு மின் பகிர்மானம், மின் உற்பத்தி பகமை எரிசக்தி மற்றும் மின் தொடரமைப்பும் கழக தலைவர் திரு.க.நந்தகுமார், இ.ஆ.ப., தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் திரு.அனீஷ் சேகர், இ.ஆ.ப., ஒன்றிய மின்சாரத் துறை இணை செயலாளர் திரு.ஷஷாங் மிஸ்ரா, இ.ஆ.ப, மாநில மின்சாரத் துறை இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) திரு.விஷு மஹாஜன், இ.ஆ.ப மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## புத்தாண்டு வாழ்த்துக்கள்-2025

**பொறியாளர் சங்கம் உறுப்பினர்கள்**

**அனைவருக்கும் சங்கம்**

**ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகளைத்**

**தெரிவித்துக்கொள்கிறது**

## தொழில்

சென்னை, நவ.7

தமிழகத்தில் ஹைட்ரஜன், பசுமை அமோனியா உற்பத்திக்கு மட்டும், தினமும் 7,000 மெகா வாட் மின்சாரம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு, தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில், பசுமை ஹைட்ரஜன், பசுமை அமோனியா உற்பத்தி முனையம் அமைக்க அனுமதி அளித்துள்ளது.

### பசுமை அமோனியா

சிங்கப்பூரை சேர்ந்த, 'செம்ப்கார்ப்' நிறுவனம், 36,238 கோடி ரூபாய் முதலீட்டில், பசுமை ஹைட்ரஜன் ஆலை திட்டத்தை செயல்படுத்த உள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா, கடந்த ஆகஸ்டில் நடந்தது.

திருநெல்வேலி, கங்கை கொண்டானில், கே.ஆர்.ஆர்., ஏர் நிறுவனம், பசுமை அமோனியா உற்பத்தி ஆலை அமைக்கிறது. இதேபோல், பல நிறுவனங்களும் பசுமை ஹைட்ரஜன், அமோனியா உற்பத்தி ஆலைகளை அமைக்க திட்டமிட்டுள்ளன. இதற்காகா காற்றாலை, சூரியசக்தி மின் நிலையங்களை உள்ளடக்கிய பசுமை மின் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. எனவே தமிழக மின் தேவையில், பசுமை ஹைட்ரஜன், பசுமை அமோனியா உற்பத்தி ஆலைகளுக்கு மட்டும் வரும் 2031–32ல் தினமும் 7,000 மெகா வாட் மின்சாரம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டு உள்ளது.

### மின் வழித்தடம்

இந்த மின்சாரத்தை பிற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல, மத்திய மின் தொடரமைப்பு கழகம், 2,600 கோடி ரூபாய் செலவில் தூத்துக்குடியில் மின் வழித்தடங்களை அமைக்க உள்ளது.

அதற்கு ஏற்ப, கூடுதல் வழித்தடங்களை அமைக்குமாறு மின் வாரியத்தை, மத்திய மின்துறை அறிவுறுத்தி உள்ளது. தமிழக மின் தேவை தற்போது தினமும் சராசரியாக, 15,000 மெகா வாட்டாக உள்ளது. கோடை காலத்தில், 20,000 மெகா வாட் வரை அதிகரிக்கிறது.

நன்றி – தினமலர்

# கண்ணீர் அஞ்சலி

**பொறியாளர் குடும்பத்தினர்கள்**

1. 01.11.2024 **பொர்.P.வெங்கடேசன்**, உதவி செயற்பொறியாளர் / இ&ப / பாக்கம், திருப்பத்தூர் கிளை அவர்களின் **தந்தையார்.** 9442805750
2. 10.11.2024 **பொர்.M.பாத்திமாராணி**, இளநிலை பொறியாளர் / instn-I, TTPS கிளை அவர்களின் **தாயார்.** 9486919387
3. 19.11.2024 **பொர்.K.புனிதா**, உதவி செயற்பொறியாளர் / முறைப்பணி / 230 கி.வொ. நெய்வேலி துணை மின்நிலையம், கடலூர் கிளை அவர்களின் **தாயார்.** 8825523909
4. 21.11.2024 **பொர்.P.அன்புச்செழியன்** / உதவி செயற்பொறியாளர் / மேற்கு / ஈரோடு, ஈரோடு கிளை அவர்களின் **தந்தையார்** 9894791151

ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.



சிவகங்கை கிளை



தஞ்சாவூர் கிளை



On 21.11.24 @ 03.00PM scheduled discussion was held with SE/EDC/Salem. 9 points were discussed. In the discussion Board side (1) SE/SEDC (2) EE/GI (3) Adm. officer (I/c) Sangam side (1) Secretary (2) GC member (3) Then Organizing secretary participated.



திருநெல்வேலி கிளையின் உறுப்பினர் மறைந்த பொர்.S.மகாலிங்கம் / JE அவர்களது காமதேனு நலநிதி பணப்பயன் ரூ.3,10,000/–க்கான காசோலை அவரது குடும்பத்தாரிடம் பொறியாளர் சங்கம் சார்பில் 24.11.2024 அன்று அவரது குடும்பத்தாரிடம் திருநெல்வேலி கிளை சங்க பொறுப்பாளர்கள் மற்றும் திருநெல்வேலி மண்டல செயலாளர் முன்னிலையில் காமதேனு நலநிதி செயலாளர் அவர்களால் வழங்கப்பட்டது.

**MIN ALAI - November 2024 RNI No. TNBIL / 2012 / 47622**
**Printed Book Periodical**

# சமுதாயப்பணியில் சங்கம்

மறைந்த பொறியாளர் சங்க பொறுப்பாளர்களின்
நினைவாக பொறியாளர் சங்கம் முன்னின்று நடத்தும்
தமிழகம் தழுவிய 9ஆம் ஆண்டு மாபெரும்

# இரத்த தான முகாம்

அனைத்து கிளைகளிலும் 12 டிசம்பர் 2024
நடைபெறும் இரத்ததான முகாமில் அனைத்து உறுப்பினர்களும்
தங்கள் குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் கலந்து கொண்டு
இரத்த தானம் அளித்து உயிர்களைக் காக்க உதவிடுவோம்.

## இரத்த தானம் செய்வோம்
## உயிர்களைக் காப்போம்




**TNEB Employees Live Blood Donors Club**

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**
பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam